1992 ஏப்ரல் 21]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஆரம்ப சுகாதார நிலையத்திலேயே அது இயங்கிவருவதாக அங்கே தகவல் கொடுத்திருக்கிறார்கள். அது, இப்போது அங்கே சரியாக இயங்காமல் இருந்தால், அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். ஏற்கெனவே பணம் ஒதுக்கப்பட்டு, அந்த வேலைகள் துவங்கப்பட வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. என்ன காரணத்தினால் அது நின்றிருக்கிறது என்பதைப் பார்த்து, அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 576, திரு. கு. லாரன்ஸ், இருக்கையில் இல்லை. (குறுக்கீடு) திரு. மா. சுந்தரதாஸ், நீங்கள் கேட்கிறீர்களா? திரு. மா. சுந்தரதாஸ். மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்.

576—

கன்னியாகுமரி மாவட்டத்தில் மரங்கள் வெட்டப் படுவதைத் தடை செய்ய சிறப்புத் திட்டம்.

*2056—**திரு. கு. லாரன்ஸ் :**

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கன்னியாகுமரி மாவட்டம் பாதுகாக்கப்பட்ட காடுகளிலுள்ள சிறப்பான தேக்கு, ஈட்டி, கடம்பு மற்றும் பல்வேறு மரங்களின் விலை மதிப்பு குறித்து அரசு மதிப்பீடு செய்துள்ளதா?

(ஆ) இச்சிறப்பான மரங்கள் சென்ற 25 ஆண்டுகளில் எவ்வளவு ரூபாய் பெறுமானமுடையவை கடத்தல் காரர்களாலும் மற்றவர்களாலும் வெட்டப்பட்டுள்ளது.

(இ) இதனைத் தடை செய்ய அரசு சிறப்புத் திட்டம் ஏதும் வகுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ரூபாய் 83 லட்சம்.

(இ) இப்பொருள் அரசின் பரிசீலனையிலுள்ளது.

[1992 ஏப்ரல் 21

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, இந்த பாதுகாக்கப்பட்ட காடுகளில் பல கோடி ரூபாய் மதிப்புள்ள தேக்கு போன்ற நல்ல மரங்கள் ஃபெல்லிங் ட்ரீஸ் கிடைக்கின்றன. அவை பத்தாண்டுகள் ஆகியும் கணக்கெடுக்கப்படவில்லை. அவற்றை ஏலம் மூலமாக 'ஓபன் ஆக்ஷன்' மூலமாகக் கொடுக்க அரசு முனவருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது போன்ற குறிப்புகள் அரசின் கவனத்திற்கு வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, மொத்தக் கணக்கெடுப்பில் பார்க்கும்போது, அங்கே இருக்கிற மரங்களுடைய மதிப்பீடு, 295 கோடி ரூபாய். அவற்றைப் பாதுகாக்கின்ற வகையிலே அரசு பல்வேறு நடவடிக்கைகளை இன்றைக்கு மேற்கொண்டிருக்கிறது. பெரிய அளவிலே இருக்கிற காடுகளை சிறியதாக மாற்றியமைப்பதற்கும், வனக் குற்றங்களைத் தடுப்பதற்காக ஆயுதங்களை வாங்குவதற்கும், முக்கியமான வனப் பகுதிகளில் கம்பியில்லாத் தொடர்பு, இந்திய நாட்டினுடைய வரலாற்றில், தமிழகத்தில் 1993-வது ஆண்டிற்குள் முடிகிற அளவுக்கு, நம்முடைய ஒப்பற்ற தலைவியாக இருக்கிற தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணை வழங்கி இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, எந்தத் தவறுகள், எந்த அளவிலேயும் நடைபெறாமல் இருப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளும். உறுப்பினர் குறிப்பிட்டதைப் போல, கீழே மரங்கள் விழுந்திருக்கின்றன என்கிற குறிப்புகள் அரசின் கவனத்திற்கு வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மரங்களை வெட்டுவதைத் தடுப்பதற்காக பொதுவாக ஒவ்வொரு மாவட்ட வாரியாக 'ஸ்குவாட் பார்க்கிங்' பொது மக்களைக் கொண்ட விதத்தில தனியாக ஒரு குழுவினை அமைத்து சண்காணிக்கிற விதத்தில் ஒரு 'ஸ்குவாட்' அமைப்பதற்கு இந்த அரசு முன்வருமென்று சொன்னால், பெருவாரியாக திருட்டுத்தனமாக மரங்களை வெட்டுவதைத் தடுக்க முடியும். எனவே, அந்த விதத்தில், ஒரு 'ஸ்குவாட' அமைப்பதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறன்.

1992 ஏப்ரல் 21]

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரங்கள் வெட்டியது அந்தக் காலம். ஆனால், புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு, எந்த இடத்தில் மரங்களை வெட்டினாலும், கடுமையான நடவடிக்கை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதே போல, பொது மக்களுடைய விழிப்புணர்ச்சிக் குழு ஒன்றை உருவாக்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது. ஆகவே, பொதுமக்கள் அந்த நேரத்திலே எங்களுடைய கவனத்திற்கு ஏதாவது ஒரு இடத்தில், ஒரு சிறிய தவறு ஏற்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டாலும் கூட, உடனுக்குடன் இந்த அரசு தங்குதடையின்றி யாராக இருந்தாலும் கைது செய்து, குண்டர் சட்டத்திலே கைது செய்து கொண்டிருக்கிறது. ஆகவே இது போன்ற தவறுகள், இந்த அரசைப் பொறுத்த வரையில், நம்முடைய தமிழக அரசு, அதுவும் ஒப்பற்றத் தலைவியாக இருக்கிற புரட்சித் தலைவி அவர்களுடைய அரசில் நடைபெறாது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. என். பன்னீர் செல்வம்.

திரு. என். பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலே, பல....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி, குமரி மாவட்டத்தைப் பற்றியது (குறுக்கீடு) இல்லை, இல்லை. அதற்கு உங்களுக்குப் பதில் வராது. இது 'ஸ்பெஸிபிக் கொஸ்டியன்' குமரி மாவட்டத்தைப் பற்றியதாகும்.

முற்பகல் 10-00

வினா எண் 577, டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

577—

அரசு ரப்பர் சழகத்தில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு மேற்பார்வையாளராக பதவி உயர்வு அளித்தல்.

*3118— டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கன்னியாகுமரி மாவட்டம் அரசு ரப்பர் கழகத்தில் 20 ஆண்டுகளாக பணியாற்றி வரும் பால்வெட்டும் தொழிலாளர்களில் 100 பேருக்கு ஒருவர் என்ற வீதத்தில் மேற்பார்வையாளர் (Supervisor) பதவி உயர்வு கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?